விலை: 50.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : 12 viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 092 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 07 செவ்வாய்க்கிழமை (21.03.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

## தேர்தலை நடத்த வலியுறுத்தி மாபெரும் போராட்டம் வெடிக்கும்

### அரசுக்கு அநுர குமார எச்சரிக்கை



(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலை வலியுறுத்தி நாட்டின் நாலாபுறமெங்கும் மாபெரும் மக்கள் பேராட்டம் வெடிக்கும் என ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க எச்சரித்துள்ளார்.

ஹோமாகம பகுதியில் நேற்று நடைபெற்ற மக்கள் 11

## கஞ்சா கடத்தலுக்கு மோ.சைக்கிள் கொடுத்த

### பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

கஞ்சா கடத்தலுக்கு மோட்டார் சைக்கிள் கொடுத்த பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட இருவர் கொடிகாமம் பொலிஸாரால் நேற்று திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இம்மாத ஆரம்பத்தில் கொடிகாமம் 11

## வடமராட்சியில் மின்னல் தாக்கம்

### சிறுவன் காயம்

(கரணவாய்)

வடமராட்சியில் இடி மின்னல் தாக்கம் காரணமாக வீடு ஒன்றின் மின்சுற்று முற்றாக எரிந்து நாசமானதுடன் வீட்டில் இருந்த இரண்டு வயது சிறுவன் ஒருவர் காயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்திய 11

# இலங்கைக்கு நிதியுதவி

# ஐ.எம்.எப் அனுமதி

## 7 பில்லியன் வரை கடன் பெற முடியும்

(கொழும்பு)

இலங்கைக்கு நிதி உதவி வழங்க சர்வதேச நாணய நிதியம் அனுமதி வழ்ங்கியுள்ளது. 7 பில்லியன் டொலர்கள் வரை நிதியுதவியைப் பெறமுடியும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கான நிதி உதவிக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தனது டுவிட்டர் செய்தியில் இதனை உறுதி செய்துள்ளார்

இது நீண்ட பயணம் ஆனால் அனைவரினதும் கடினமான உழைப்பு அர்ப்பணிப்பு 11

INTERNATIONAL MONETARY FUND

## ஐ.பி.எல்லில் விளையாட வியாஸ்காந்த் தெரிவு

### விரைவில் இந்தியா பயணம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வியாஸ்காந்த் இந்தியாவில் நடைபெறவுள்ள ஐ.பி.எல் போட்டியில் விளையாடத் தெரிவாகியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் 11

## ஆட்டோ கட்டணங்கள் குறைப்பு

(கொழும்பு)

நாட்டில் நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் முச்சக்கரவண்டி கட்டணங்களை குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அகிலஇலங்கை 11

## நீதிமன்றத்துக்கு கட்டளை பிறப்பிக்கும் அதிகாரம்

### பாராளுமன்றத்துக்கு கிடையாது

### பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

நீதிமன்றத்துக்கு கட்டளை பிறப்பிக்கும் அதிகாரம் பாராளுமன்றத்துக்கு கிடையாது. நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள வழக்கு தொடர்பில் பாராளுமன்ற சிறப்புரிமைகள் ஊடாக கருத்துக்களை முன்வைக்கக்கூடாது என்ற நாகரிகம் கூட அரசாங்கத்திற்கு இல்லை என ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார். (ம-7,9)

## அரசடியில் வாள்வெட்டு; இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரசடி சந்திக்கு அண்மையாக நேற்று மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற வாள்வெட்டு தாக்குதலில் இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

அரியாலையை சேர்ந்த குழுவக் 11

## உள்ளூராட்சி மன்றங்களின் காலத்தை நீடிக்க முடியுமா?

### சட்டமா அதிபரின் பரிந்துரையை பெற முடிவு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களின் உத்தியோகபூர்வ காலத்தை நீடிக்க முடியுமா? சட்டமா அதிபரின் பரிந்துரை பெற்றுக்கொள்ளப்படும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கம்புர தெரிவித்துள்ளார்.

அதற்கேற்ப அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

340 உள்ளூராட்சி 11

## உடுவிலில் மதம் மாற்ற முயற்சி

### பொலிஸில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

உடுவிலில் மதம் மாற்றம் செய்ய முயற்சி செய்தமைக்கு எதிராக பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

உடுவில் விளையாட்டுத் திடலில் மதமாற்ற முயற்சிக்காக கூட் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபரீத முடிவெடுத்த உயர்தர மாணவி மரணம்

## சுன்னாகத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உடுவில் பகுதியில் 19 வயது யுவதி ஒருவர் விபரீத முடிவெடுத்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

குறித்த யுவதி வீட்டில் யாரும் இல்லாத வேளை நேற்றைய தினம் பிற்பகல் தனது வீட்டில் தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார்.

அவர் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியுள்ள மாணவி என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவரது சடலமானது மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-7,9,104)

# வித்தியா கொலை வழக்கு; உயர் நீதிமன்றில் மனு

புங்குடுதீவு பாடசாலை மாணவி வித்தியா படுகொலை செய்யப்பட்ட வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பிரதிவாதிகள் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொள் வதற்கான திகதியை உயர் நீதி மன்றம் நிர்ணயித்துள்ளது.

இந்த மேன்முறையீட்டு மனுக்கள் நேற்று ப்ரிதி பத்மன் சூரசேன, காமினி அமரசேகர மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போது முன்வைக்கப்பட்ட உண்மைகளை பரிசீலித்த மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் பிரதிவாதிகளின் மேல்முறையீட்டு மனுக்களை ஒக்டோபர் 6 ஆம் திகதி விசாரிக்க திகதியை நிர்ணயித்துள்ளது.

இந்த மேன்முறையீடுகள் கோரப்பட்ட நேரத்தில், சிறையில் இருந்த வழக்கில் முக்கிய குற்றவாளியான "சுவிஸ் குமார்" பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் சிறை அதிகாரிகளால் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் வித்தியா என்ற மாணவி படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணையை நடத்திய யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம், பிரதிவாதிகள் ஏழு பேருக்கும் மரண தண்டனை விதித்தது.

தண்டனை விதிக்கப்பட்ட விதம் சட்டத்திற்கு எதிரானது என்றும், குற்றச்சாட்டில் இருந்து தங்களை விடுவிக்க வேண்டும் என்றும் குற்றவாளிகள் உயர் நீதிமன்றத்தில் சந்தேகநபர்கள் சார்பில் முறையிட்டுள்ளனர்.

(ம-7,9,33


## கல்யாண மாலை

### பதவி வெற்றிடம்

- **முகாமையாளர்**
  (இருபாலாரும்)
  ஓய்வுபெற்றவர்களுக்கு முன்னுரிமை
- **முகாமைத்துவ உதவியாளர்கள்**
  (பெண்கள்)
  25 வயதிற்கு மேற்பட்டோர்
  யாழ். நகரிற்கு அண்மையாக இருப்பவர்களுக்கு முன்னுரிமை

தொடர்புகளுக்கு

**076 097 3127**


# 113.5 பில்லியன் ரூபாய் பணம் அச்சிடப்பட்டது

(கொழும்பு)

மத்திய வங்கி மார்ச் 15 ஆம் திகதி, 113 பில்லியன் ரூபாய் மதிப்பிலான பண நோட்டுகளை அச்சிட்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

113.5 பில்லியனுக்கு திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்துள்ளதாக மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கி அரசாங்கப் பத்திரங்களை வாங்கும் போது, புதிய நாணயத்தாள்கள் புழக்கத்தில் சேர்க்கப்படும். இது "பணம் அச்சிடுதல்" என்று அழைக்கப்படுகிறது.

ஒரு நாளில் 113.5 பில்லியன் ரூபாய் மதிப்பிலான நாணயத்தை அரசாங்கத்தால் அச்சிட முடியும் என்றால், தேர்தல் நடத்துவதற்காக 9 பில்லியன் ரூபாய் மதிப்பிலான பணத்தை அச்சிட முடியாது என்று எப்படிச் சொல்ல முடியும்? என பாராளு மன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கேள்வி எழுப்பினார்.

(ம-7,9)


## சுற்றுலா விசா சம்பந்தமான ஆலோசனைகள்

UK/ USA/ Jappan/ Canada ஆகிய நாடுகளுக்கான வேலைவாய்ப்பு விசாக்களும் ஐரோப்பிய நாடுகளுக்கான Visit விசாக்களும் தேவைப்படுபவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

Note ⇨ Visit visa 1 மாத காலத்தில் செய்து தரப்படும்.

Hybrid International Hub (pvt) Ltd - Jaffna

(C-6200)

**076 250 0098/ 021 222 1265**


# மரண அறிவித்தல்

தோற்றம் 20 - 10 - 1954



மறைவு 19 - 03 - 2023

## சபாபதி பரமேஸ்வரி (பரமேஸ்)

மூத்ததம்பி லேன் மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி பரமேஸ்வரி அவர்கள் நேற்றுமுன்தினம் (19.03.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி - தங்கம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் சண்முகநாதன், கதிர்காமநாதன் (கனடா), இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் பிரியா, மோகன்ராஜ், உமாமகேஸ்வரன் (நோர்வே), கமல்ராஜ் (கனடா), விக்கினேஸ்வரன், அமுதன்ராஜ் (சுவிஸ்), சிந்துஜா (கனடா), தீபன்ராஜ் (கனடா) நீரஜா ஆகியோரின் மாமியும் ராகுலன், ரவிந்தன், வைஷ்ணவி (கனடா), பைரவி ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21.03.2023 இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 01.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூத்ததம்பி லேன்,
மானிப்பாய்.
077 348 6790

(14963)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## சங்கரப்பிள்ளை நவரத்தினம்



குஞ்சுக்குளம், வன்னேரிக்குளத்தைப் பிறப்பிடமாகவும் நாவற்காடு, வரணியை வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை நவரத்தினம் அவர்கள் நேற்று (20.03.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை மற்றும் லீலாவதி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் தேவகுமாரியின் (ஆசிரியை - யா/மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை) அன்புக் கணவரும் காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் சரஸ்வதி தம்பதிகளின் மருமகனும் கிருஷிகன், கிஷானி, நிருத்திகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜயரத்தினம், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் யோகராசா, தங்கராசா, மகேஸ்வரன்(தபால் ஊழியர்), தர்மராசா, புஸ்பராணி (ஆசிரிய ஆலோசகர் - கிளிநொச்சி தெற்கு), காலஞ்சென்ற சறோஜினிதேவி மற்றும் கீதா, மங்களேஸ்வரி (ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பூபதி, காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் இராஜேஸ்வரி, இராஜேஸ்வரி, சிவமலர் (ஆசிரியை), காலஞ்சென்ற சந்திரலதா (ஆசிரியை) மற்றும் ஆனந்தசிவம்(ஓய்வு நிலை கோட்டக் கல்வி அதிகாரி - பளை), சுவர்ணராஜா, மகாபரன்(கிராம அலுவலர் - கரைச்சி) மற்றும் தேவராணி, தேவதாஸ் தேவரதி (ஆசிரியை), தேவகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2023) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பி.ப 1.00 மணியளவில் குடமியன் இந்து மயானத்துக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
077430 2366 (மைத்துனர்)
077 818 6942 (சகோதரன்)
077 392 7148 (பெறாமகன்) Viber, Whatsapp

(C-6199)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 36 ஆயிரம் மெற்றிக் தொன் உரம் விவசாய அமைச்சிடம் கையளிப்பு

(கொழும்பு)

சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்காவின் முகவரமைப்பின் நிதியுதவில் வழங்கப்பட்ட 36000 மெற்றிக் தொன் உரத்தை சிறுபோகத்திற்காக ஐ.நா உணவு . விவசாய ஸ்தாபனம் விவசாய அமைச்சிடம் கையளித்துள்ளது.




ஏப்ரல் - ஓகஸ்ட் மாதங்களுக்கிடையிலான சிறுபோகத்திற்கும் அதற்கு அடுத்து வரும் பயிர்ச்செய்கை போகங்களிலும் ஒரு மில்லியனுக்கும் அதிக நெல் விவசாயிகளுக்கு இந்த உரம் இலவசமாக பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் நிலத்தின் அளவு மற்றும் அதற்கு தேவையான அளவின் அடிப்படையில் உரம் வழங்கப்படும்.

உரத்தை கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் , "விவசாயிகளின் அரிசி உற்பத்தியை அதிகரித்து . நாட்டின் உணவுத் தேவைகளை பூர்த்தி செய்ய கடுமையான முயற்சி செய்யும் இந்த சந்தர்ப்பத்தில் 45000 தொன்னுக்கும் அதிக உரம் கொண்டு வரப்பட்டுள்ளது.

75 ஆண்டுகளாக முன்னேற்றத்திலும் நெருக்கடியின் ஊடாகவும் இலங்கை மக்களுக்கு ஆதரவாக அமெரிக்க மக்கள் நின்றுள்ளதோடு. எங்களின் நல்லெண்ணத்தையும் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தியுள்ளோம் என்றார்.

அமைச்சர் மஹிந்த அமரவீர கருத்து வெளியிடுகையில் . இந்த உதவியின் மூலம் எதிர்வரும் அறுவடைப் பருவங்களில் விளைச்சல் சீராக மேம்படும் என்று நம்புகின்றோம். அரிசி இறக்குமதியில் தங்கியிருப்பதை குறைத்து. இலங்கை நெல் விவசாயிகளை மேலும் வலுவூட்டுவதே எமது இறுதி நோக்கமாகும் எனத் தெரிவித்தார். (நி)

# பண்டாரவளையில் தொடர்குடியிருப்பு மீது சரிந்த மண்மேடு

## 7 பேர் காயம், மீட்புப் பணிகள் தீவிரம்



(பண்டாரவளை)

பண்டாரவளை - பூனாகலை - கபரகலை பகுதியில் உள்ள நெடுங்குடியிருப்பில் நேற்று முன்தினம் பெய்த கடும் மழையின் காரணமாக மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

அனர்த்த நிலைமை காரணமாக மூன்று வர்த்தக வீடுகள் மற்றும் தோட்ட வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் 7 பேர் காயமடைந்து கொஸ்லந்த மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட சிலர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாகவும் தொடர்ச்சியான மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு, பண்டாரவளை, பூனாகலை மகல்தெனிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் பெய்த கடும் மழையினால், ஏற்பட்ட பெரும் வெள்ளத்தில் பல தோட்ட வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன.

குறித்த பகுதியில் வசித்த சுமார் 300 பேர் புனகலை தமிழ் வித்தியாலயத்தில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# நிறைவேற்று அதிகார அழுத்தத்தில் இருந்து நீதித்துறையை பாதுகாக்க போராட்டம்

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிவிப்பு



(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரத்தின் அழுத்தத்திலிருந்து நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் போராட்டத்தை நடத்த உள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிவித்துள்ளது.

நீதிமன்றத் தீர்ப்புகளை முறையாகப் புறக்கணிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தே சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

நிர்வாகிகள் நீதிமன்ற உத்தரவுகளுக்குக் கீழ்ப்படியத் தயாராக இல்லை. தீர்ப்புகளை முறையாகப் புறக்கணிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆகவே நீதிபதிகளை அழுத்தத்திற்கு உள்ளாக்கும் நிறைவேற்று அதிகாரத்தை அனுமதிக்கக் கூடாது.

அத்தோடு நீதித்துறைக்கு அழுத்தம் கொடுப்பதற்கு பாராளுமன்றத்தை பயன்படுத்துவது ஆரோக்கியமற்ற செயற்பாடு எனவும் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார். (நி)

# உள்ளூராட்சி தேர்தல்களை தாமதிப்பது பொருத்தமற்றது - மகிந்த தேசப்பிரிய

(கொழும்பு)

உள்ளூராட்சிதேர்தல்களை தாமதிப்பது பொருத்தமற்றது என தெரிவித்துள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய 25 ஆம் திகதி தேர்தல் இடம்பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உள்ளூராட்சி சபைகளின் காலம் முடிவடைவதால் தேர்தல்களை கூடிய விரைவில் நடத்துவது அவசியம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நிலை எவ்வாறானதாகயிருந்தாலும் குறிப்பிடப்பட்ட காலத்திற்கு அப்பால் தேர்தல்களை பிற்போடுவது உகந்த விடயமல்ல. அதிகாரிகளின் கீழ் நீண்ட காலத்திற்கு உள்ளூராட்சி சபைகளை வைத்திருப்பதும் பொருத் தமற்றது .

அடுத்த மூன்று அல்லது நான்கு மாதங்களிற்குள் தேர்தல் இடம்பெறும் என நான் கருதுகின்றேன்.

தேர்தல் நடைபெற்றால் நல்லது. ஆனால் அது கடினம் என்பது போல தற்போது தோன்றுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தபால் மூல வாக்களிப்பிற்காக அரசாங்க அச்சக திணைக்களத்திலிருந்து வாக்குசீட்டுகள் கூட தற்போது கிடைக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# இந்திய முப்படைக் குழு இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கையுடனான இந்தியாவின் பாதுகாப்பு பங்காளித்துவத்தை மேலும் வலுப்படுத்துவதற்கான இந்தியாவின் முப்படைகளைச் சேர்ந்த 19 அதிகாரிகள் இலங்கை வந்தடைந்துள்ளனர்.

இந்த குழுவினர் நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த அதிகாரிகள் 46 ஆவது உயர் விமானக் கட்டளைப் பாடத்தின் கீழ் ஒரு வாரகால உத்தி சார்ந்த ஆய்வுப் பயணத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வந்துள்ளனர்.

இலங்கையுடனான இந்தியாவின் பாதுகாப்பு பங்காளித்துவத்தை மேலும் வலுப்படுத்துவதற்கான வாய்ப்பாக இந்த விஜயம் அமைவதாக இந்திய ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (நி)

# அரை சொகுசு பேருந்து சேவை அடுத்த மாதம் முதல் ரத்து

(கொழும்பு)

அடுத்த மாதம் முதல் அரை சொகுசு பேருந்து சேவைகள் முற்றிலுமாக நிறுத்தப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பேருந்துகளுக்கும் வழக்கமான பேருந்துகளுக்கும் வித்தியாசம் இல்லை என்பதை அவதானித்ததால் சம்பந்தப்பட்ட பேருந்து சேவை இரத்து செய்யப்பட்டுள்ளது.

எனினும் இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி)

# கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்கும் வரை பணிப்புறக்கணிப்பு தொடரும்

## பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஆரம்பித்துள்ள பணிப்புறக்கணிப்பு போராட்டம் நேற்று திங்கட்கிழமை 12 ஆவது நாளாக தொடர்கின்ற நிலையில் பல்கலை கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

கோரிக்கைகளுக்குத் தீர்வு கிடைக்கும் வரை வேலை நிறுத்தப் போராட்டம் தொடரும் என பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கை உள்ளிட்ட பல விடயங்களை முன்னிறுத்தி மின்சாரம் மற்றும் நீர் விநியோக தொழிற்சங்கங்களின் போராட்டமும் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது.

தமது கோரிக்கைகள் தொடர்பாக இந்த வாரத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாட உள்ளதாகவும் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியன் வெல்ஸ் டெனிஸ்

# அல்கராஸ், ரைபகினா சம்பியன்

அமெரிக்காவில் நடைபெற்ற இந்தியன் வெல்ஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடர். இனிதே நிறைவுப் பெற்றுள்ளது.

இந்த தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில், கார்லோஸ் அல்கராஸ் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை வென்றார்.

இறுதிப் போட்டியில், ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ், ரஷ்யாவின் டேனில் மெட்வேடவ்வை எதிர்கொண்டார்.

இப்போட்டியில், சிறப்பாக விளையாடிய கார்லோஸ் அல்கராஸ், 6-3, 6-2 என்ற நேர் செட் கணக்குகளில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை வென்றார்.

இதேபோல பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில், கஸகஸ்தானின் எலெனா ரைபகினா சம்பியன் பட்டத்தை வென்றார்.

இறுதிப் போட்டியில், கஸகஸ்தானின் எலெனா ரைபகினா, பெலராஸின் அரினா சபலெங்காவுடன் பலப்பரீட்சை நடத்தினார்.

எதிர்பார்ப்பு மிக்க இப்போட்டியில், எலெனா ரைபகினா, 7-6, 6-4 என்ற செட் கணக்குகளில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை வென்றார். (6)





# இலங்கை அணிக்கெதிரான தொடரை வென்றது நியூஸிலாந்து அணி



இலங்கை அணிக்கெதிரான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில், நியூஸிலாந்து அணி இன்னிங்ஸ் மற்றும் 58 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

வெலிங்டனில் கடந்த 17 ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 580 ஓட்டங்களை பெற்றிருந்தபோது, தனது முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தை இடை நிறுத்திக் கொண்டது.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணி, 164 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

416 ஓட்டங்கள் பின்னிலையில் இருந்த இலங்கை அணியை நியூஸிலாந்து அணி, பலோ ஒன் முறையில் துடுப்பெடுத்தாட அழைத்தது.

இதன்படி பலோ ஒன் முறையில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, 358 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இதனால், நியூஸிலாந்து அணி இன்னிங்ஸ் மற்றும் 58 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக் ஹென்ரி நிக்கோல்ஸ் தெரிவு செய்யப்பட்டதோடு, தொடரின் நாயகனாக கேன் வில்லியம்சன் தெரிவுசெய்யப்பட்டார். இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை, நியூஸிலாந்து அணி முழுமையாக கைப்பற்றியது.

டெஸ்ட் தொடரைத் தொடர்ந்து, தலா மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 மற்றும் ஒருநாள் தொடர் நடைபெறவுள்ளது. இதில் முதலாவதாக நடைபெறும் ஒரு நாள் தொடரின் முதல் போட்டி, எதிர்வரும் 25 ஆம் திகதி கிறிஸ்ட்சர்ச் மைதானத்தில் நடைபெறவுள்ளது. (6)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2789

### ருக்ஷாயினி




### சியாமளா




### கம்ஷிகா




### தினேஷ்




### விஜிதன்




### நந்தன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் ஆதரவு மூலமே மகிந்தவை பிரதமராக்குவோம்

## மொட்டுக் கட்சி சூளுரை

(கொழும்பு)

மக்கள் ஆதரவு மூலமே மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமராக்குவோம் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மொட்டுக் கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் இவ்வாறு தெரிவித்தார்.

"மகிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்க வேண்டுமென்றால் அதனை எம்மால் இலகுவில் செய்து விட முடியும். ஆனால், அவ்வாறான எந்தவொரு முயற்சியும் தற்போது இடம்பெறவில்லை.

தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்த்தன எம்முடன் ஒத்துழைப்புடன் செயற்படுகின்றார். அவருடன் எமக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை.

ஜனாதிபதி, பிரதமர் பதவி ஆசையில் திரியும் ஒரு சிலரே இப்படியான வதந்திகளைப் பரப்பி வருகின்றனர். மக்கள் ஆதரவு மூலமே மகிந்தவைப் பிரதமராக்குவோம் என்றார். (நி)

# இலங்கைத் தமிழர்களுக்கு 223 கோடி செலவில் 3949 வீடுகள்

## தமிழக அரசின் வரவு- செலவுத்திட்டத்தில் அறிவிப்பு

(சென்னை)

இலங்கை தமிழர்களுக்கு 3949 வீடுகள் 223 கோடி செலவில் கட்டப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

தமிழக சட்டசபையில் 2023 - 2024 ஆம் ஆண்டுக்கான தமிழக அரசின் வரவு- செலவுத்திட்டத்தினை நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தாக்கல் செய்தார்.

இதன்போதே நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார். (நி)

# எரிபொருள்,மின்சாரக் கட்டணத்தை குறையுங்கள்

## சம்பிக்க ரணவக்க



(கொழும்பு)

டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி அதிகரித்துள்ளதால் எரிபொருள் மற்றும் மின்கட்டணங்களை கணிசமான விகிதத்தில் குறைக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமும் தற்போது பாரிய இலாபத்தை ஈட்டுகின்றன என்றும் எரிபொருள் மற்றும் நிலக்கரியை இறக்குமதி செய்வதற்கான ஒப்பந்த நடைமுறையில் ஊழல் இருப்பதாகவும் குற்றம் சாட்டினார்.

இலங்கை கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியதாலும் இறக்குமதிக்கான கட்டுப்பாடுகள் மற்றும் எரிபொருள் நுகர்வு குறைக்கப்பட்டதாலும் அமெரிக்க டொலருக்கான தேவை குறைந்துள்ளது என்றும் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஆகவே வெளிநாடுகளில் இருந்து பெறப்பட்ட கடன்களை செலுத்த ஆரம்பித்தால் அல்லது இறக்குமதியை அனுமதித்தால் டொலரின் மதிப்பு அதிகரிக்கும் என்றும் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.(நி)

# மாத இறுதியில் இருந்து மாணவர்களுக்கு வாய்மொழி மூல ஆங்கிலம்- கல்வி அமைச்சு

(கொழும்பு)

ஆங்கில மொழியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, அனைத்து தேசிய பாடசாலைகளிலும் 30 ஆம் திகதி முதல் தரம் ஒன்றிலிருந்து வாய் மொழி மூல ஆங்கிலம் கற்பிக்க கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

கொழும்புப் பல்கலைக் கழகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதனைத் தெரிவித்தார்.

தரம் 6-9 மற்றும் 10-13 வகுப்புகளில் இருந்து அனைத்து பாடத்திட்டங்களையும் சர்வதேச நிலைக்குக் கொண்டு வர தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் 2030 ஆம் ஆண்டளவில் கல்வித் துறையில் புதிய இலக்கை அடைவதற்கு இந்த அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (நி)

# வேட்பு மனுக்களை தாக்கல் செய்த அரச உத்தியோகத்தர்களுக்கு தீர்வு வேண்டும்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக வேட்பு மனுக்களை தாக்கல் செய்த மூவாயிரத்திற்கும் அதிகமான அரச சேவையாளர்களுக்கு வேதனம் தொடர்பில் தீர்வொன்றினை வழங்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தேர்தல் ஆணைக்குழுவிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்.

அவர் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவாவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றிலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ள அரச உத்தியோகத்தர்கள் எதிர்கொள்ளும் வேதனம் குறித்த பிரச்சினைகளுக்கு தீர்வொன்றினை வழங்குமாறு பொது நிர்வாக அமைச்சுக்கு பணிப்புரை விடுக்க வேண்டும் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# கண்ணீர் அஞ்சலி

பத்தானை,அளவெட்டி மேற்கு,அளவெட்டியினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர். இராசன் வேவிசறோஜா

**மண்ணில்- 11.02.1949** **விண்ணில்- 19.03.2023**



எமது சங்கத்தின் அங்கத்தவர் **திரு.வே.இராசன்** அவர்களின் மனைவியும், அங்கத்தவர் **திரு.இ.ஜெயமோகன்** அவர்களின் அன்பு தாயாருமான அமரர் **இ. வேவிசறோஜா** 19.03.2023 ஆம் திகதி மரணமடைந்துள்ளார். இவரது குடும்பத்தினருக்கும் உறவுகளுக்கும் எமது சங்கத்தின் அங்கத்தவர்கள்,நிர்வாக சபை உறுப்பினர்கள்,பணியாளர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**அங்கத்தவர்கள்,**
**நிர்வாக சபை உறுப்பினர்கள்,**
**பணியாளர்கள்,**
**சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்**

(சி-6195)

# இராசிபலன்

**21.03.2023**
**பங்குனி 07, செவ்வாய்க்கிழமை**
**அமாவாசை முன்னிரவு 11.59 மணிவரை**

**பூரட்டாதி மாலை - 6.11 மணிவரை**
**சுபநேரம் -10.47-12.17 மணிவரை**
**இராகுகாலம்-3.17-4.47 மணிவரை**

**அமாவாசை விரதம்**
**சந்திராஷ்டமம் - ஆயிலியம், மகம்**

**வளவன்**



**மேஷம்**

தொழில் ரீதியாக புதிய பொறுப்புகள் வந்து சேரலாம், வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம்; வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள்.



**ரிஷபம்**

பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.



**மிதுனம்**

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், பேச்சைக் குறைத்துச் செயலில் தீவிரம் காட்டுவீர்கள்.



**கடகம்**

மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.



**சிம்மம்**

குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், வாகனப் பழுதுச் செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு.



**கன்னி**

குதூகலம் தரும் பயணங்கள் இடம் பெறலாம், சுற்றத்தார் வரவால் சுகம் காணும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.



**துலாம்**

சுப செய்திகள் வந்து சேரலாம், விருந்தினர் வருகையுண்டு, தலைமைப் பொறுப்புக்கள் உங்களை நாடி வரலாம், உடல் நலன் சீராகும், காரிய அனுகூலமுண்டு.



**விருச்சிகம்**

பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், உறவினர் வருகையுண்டு, மகிழ்ச்சி கூடும் நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வியாபார விருத்தியுண்டு.



**தனுசு**

நேர்மையும் நாணயமும் கொண்ட நண்பர்களால் நம்பிக்கைகள் நடைபெறலாம், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பாசம் மிக்க [illegible] இடம்பெறலாம்.



**மகரம்**

தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள்.



**கும்பம்**

இல்லத்தில் இன்பங்கள் கூடும் நாள், நண்பர்களால் வளர்ச்சி கூடும், கோரிக்கைகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள்.



**மீனம்**

திட்டமிட்ட காரியங்களில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், புதியவர்களின் நட்பு கிடைக்கும், குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது.

**இன்று நாம் செய்கின்ற நன்மை நாளை நமக்கு இன்பம் தருகிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி கலாமணியின் நூல்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கலாநிதி த.கலாமணி எழுதிய அரண் சிறுகதைத் தொகுப்பும் தரிசு-நான்கு வகை நாடகங்கள் ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா நாளை புதன் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி சு.பரமானந்தம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (நி-6)



## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம் 45/5 சீக்காய் ஒழுங்கை, வட்டாரம்-06

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம்-06 சீக்காய் ஒழுங்கையிலுள்ள இல 45/5 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப் பதிவேட்டின் பிரகாரம் சொந்தக்காரர் என்றே காணப்படுகின்றது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தின் ஒரு பகுதியினை தம்பன் கைம்பெண் அன்னப்பிள்ளை ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ச.வ சோமசுந்தரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2177/09.02.1955 ஆம் இலக்க உறுதியால் ஆசைப்பிள்ளை அப்புக்குட்டி ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்து முடையவரானார்.

சின்னாட்டி பண்டாரி ஆகியவர் குறித்த ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு ச.வ.சோமசுந்தரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3927/27.10.1958 ஆம் இலக்க உறுதியால் குறித்த தம்பன் கைம்பெண் அன்னப்பிள்ளை ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறிந்த சின்னாட்டி பண்டாரி ஆகியவர் குறித்த ஆதனத்தின் மற்றைய பகுதியினை பிரசித்த நொத்தாரிசு ச.வ.சோமசுந்தரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2178/09.02.1955 ஆம் இலக்க உறுதியால் குறித்த ஆசைப்பிள்ளை அப்புக்குட்டி ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த 2177 ஆம் மற்றும் 2178 ஆம் இலக்க உறுதிகளில் அடி உறுதியாக 24.11.1954 ஆம் திகதி S.M.J லூயிஸ் பிஸ்கால் முகதாவில் நிறைவேற்றப்பட்ட பிஸ்கால் அறுதி என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

முருகன் சரவணை பெண் மாணிக்கம் ஆகியவர் குறித்த முழு ஆதனத்தில் ஒரு பகுதியினை பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1315/03.03.1972 ஆம் இலக்க உறுதியால் குறித்த சின்னாட்டி பண்டாரியும் பெண் செல்லியும் ஆகியோர்களிடமிருந்து சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்.

முருகன் நடராசா பெண் பவளக்கொடி ஆகியவர் குறித்த முழு ஆதனத்தில் மற்றைய பகுதியினை பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1316/03.03.1972 ஆம் இலக்க உறுதியால் குறித்த சின்னாட்டி பண்டாரியும் பெண் செல்லியும் ஆகியவர்களிடமிருந்து சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்.

மூத்ததம்பி இராசையா பெண் கண்மணி ஆகியவர் குறித்த முழு ஆதனத்தையும் பிரசித்த நொத்தாரிசு ச.வ.சோமசுந்தரம் முகதாவில் 11957/20.05.1975 ஆம் இலக்க உறுதியால் குறித்த முருகன் சரவணையும் பெண் மாணிக்கமும், முருகன் நடராசாவும் பெண் பவளக்கொடியும் ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்.

வேலுப்பிள்ளை செல்வராசா பெண் பிறேமிளா ஆகியவர் குறித்த ஆதனத்தில் ஒரு பகுதியினை பிரசித்த நொத்தாரிசு இ.வசந்தசேனன் முகதாவில் 102/16.09.1979 ஆம் இலக்க உறுதியால் குறித்த முத்துதம்பி இராசையாவும் பெண் கண்மணியும் ஆகியவர்களிடமிருந்து சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானர்.

குறித்த வேலுப்பிள்ளை செல்வராசாவும் பெண் பிறேமிளாவும் ஆகியவர்கள் குறித்த ஆதனத்தில் மற்றைய பகுதியினை பிரசித்த நொந்தாரிசு கி.வைரமுத்து முகதாவில் 133/27.06.1981 ஆம் இலக்க உறுதியால் குறித்த மூத்ததம்பி இராசையாவும் பெண் கண்மணியும் ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்கள்.

சின்னத்துரை ஜெயராசா பெண் கமலா ஆகியவர் மிகுதி ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு நா.முத்துவினாயகம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3000/17.06.1987 ஆம் இலக்க உறுதியால் குறிந்த வேலுப்பிள்ளை செல்வராசாவும் பெண் பிறேமிளாவும் ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்.

சுந்தரம்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி பெண் விக்கினேஸ்வரி ஆகியவர் குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு இ.வசந்தசேனன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6863/16863/10.07.2005 ஆம் இலக்க உறுதியால் குறித்த சின்னத்துரை ஜெயராசாவும் பெண் கமலாவும் ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்.

குறித்த வேலுப்பிள்ளை செல்வராசாவும் பெண் பிறேமிளாவும் ஆகியவர்களுக்கு குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு மா.தியாகராசா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 10538/01.09.2008 ஆம் இலக்க உறுதியால் குறித்த சுந்தரம்பிள்ளை கிருஷ்ணமூர்த்தியும் பெண் விக்னேஸ்வரியும் ஆகியவர்கள் நிபந்தனை அறுதியாக கட்டுப்படுத்தி இருந்தார்கள்.

குறித்த சுந்தரம்பிள்ளை கிருஷ்ணமூர்த்தியும் பெண் விக்னேஸ்வரியும் ஆகியவர்கள் குறித்த ஆதனத்தின் ஆட்சியை பிரசித்த நொத்தாரிசு மா.தியாகராசா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 13869/24.12.2011 ஆம் இலக்க ஆட்சி ஒப்படைப்புச் சாதனம் மூலம் வேலுப்பிள்ளை செல்வராஜாவும் பெண் பிரேமிளாவும் ஆகியவர்களிடம் ஒப்படைத்திருந்தனர்.

குறித்த பொன்னுத்துரை திருக்குமரன் பெண் மாதுமைராஜி ஆகியவர் மேற்படி முழு ஆதனத்தையும் பிரசித்த நொத்தாரிசு சரவணமுத்து குகப்பிரியா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 041/15.10.2021 ஆம் இலக்க உறுதியால் குறித்த வேலுப்பிள்ளை செல்வராசாவும் பெண் பிறேமிளாவும் ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்.

குறித்த பொன்னுத்துரை திருக்குமரன் பெண் மாதுமைராஜி ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். இவ் ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும் அவ்வாறு உரிமை கோராத விடத்து குறித்த ஆதனமானது பொன்னுத்துரை திருக்குமரன் பெண் மாதுமைராஜி ஆகியவருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தவிசாளர்/செயலாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேசசபை.

(49[illegible])



## சாவகச்சேரி பொதுச்சந்தையில் கண்காணிப்பு கமராவை வையுங்கள் வியாபாரிகள் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச் சந்தையில் உள்ள தேங்காய் விற்பனைப் பகுதியில் பாதுகாப்புக் கமரா பொருத்த அனுமதி தருமாறு தேங்காய் வியாபாரிகள் சாவகச்சேரி நகர சபையைக் கோரியுள்ளனர்.

தேங்காய்ச் சந்தையில் அடிக்கடி தேங்காய் மூடைகள் களவு போவதனால் பாதுகாப்புக் கமரா பொருத்துவதற்கான அனுமதியை தந்துதவுமாறு அவர்கள் கோரியுள்ளனர். இது தொடர்பாக நகர சபை உறுப்பினர்கள் சிலர் கருத்து தெரிவிக்கையில், கடந்த காலத்தில் நகரசபை ஊடாக பொதுச்சந்தையில் பாதுகாப்புக் கமரா பொருத்தவென நிதி ஒதுக்கப்பட்ட போதிலும் வேலைத்திட்டம் நடக்கவில்லை.

தேங்காய்க் கடைக்கு மாத்திரம் பாதுகாப்புக் கமரா பொருத்துவதனை ஏற்றுக் கொள்ள முடியாது. பொதுச்சந்தை முழுவதற்கும் பாதுகாப்பு கமரா பொருத்தப்பட வேண்டிய தேவை காணப்படுகிறது. இருப்பினும் அதனை நகரசபையே மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தனர். (நி-6-30)



தென்மராட்சி மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகி அம்மன் ஆலய 1 ஆம் பங்குனித் திங்கள் பொங்கல் விழா நேற்று சிறப்புற இடம்பெற்றது.

(படம்: சிவசாந்தன், கஜிந்தன்)

## திருவள்ளுவர் திருவுருவ வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

உருத்திரசேனை திருவள்ளுவர் திருவுருவ வெளியீட்டு விழா எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி சபாலிங்கம் அரங்கில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக சிவசேனை தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன், சிறப்பு விருந்தினர் களாக ராகேஷ் நட்ராஜ் மற்றும் வலம்புரிப் பத்திரிகையின் தலைமை ஆசிரியர் ந.விஜயசுந்தரம் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி. ஆறு. திருமுருகன் மற்றும் யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் எஸ்.ஸ்ரீசற்குணராஜா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6)



யாழ்.இந்தியத் துணைத் தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் இசை ஆராதனை நிகழ்வு யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

(படம்: சிவசாந்தன்)

## சுப்பிரமுனிய ஆச்சிரம கோயில் மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

ஈழத்துச் சித்தர் மரபில் வந்த சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளால் 1949 ஆம் ஆண்டு அளவெட்டியில் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரம கோயிலின் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு 25 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் அடுத்த நாள் ஞாயிற்றுக் கிழமை மாலை 6.30 மணிவரை இடம்பெறும். மறுநாள் திங்கட்கிழமை காலை 9.40 தொடக்கம் 10.20 மணிவரையுள்ள சுபவேளையில் மஹா கும்பாபிஷேகம் இடம்பெறும். (நி-6)



வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு அமைப்பின் ஏற்பாட்டில் 'உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்' எனும் தொனிப்பொருளில் நேற்று வடமராட்சி தெற்கு. மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் இரத்த தான முகாம் நடைபெற்றது.

(படம்: மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசறைப் பகுதியில்
# 40 அடி பள்ளத்தில் வீழ்ந்து கார் விபத்து - ஒருவர் பலி



(பதுளை)

பதுளை- செங்கலடி வீதியில், வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் சுமார் 40 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்திற்குள்ளானதில் அதில் புயணித்த ஆசிரியர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 7.20 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்த ஆசிரியர் பரணிதரன் (வயது -39) பசறை கல்வி வலயத்தில் அமைந்துள்ள ஹொப்டன் கலைமகள் தமிழ் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றி வருவதுடன், பாடசாலை கடமைக்குச் செல்லும் போதே இக் கோர விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த குறித்த ஆசிரியர் பசறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார். இவர் இரு பிள்ளைகளின் தந்தையாவார்.

பசறை பொலிஸார் விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். குறித்த விபத்து இடம் பெற்ற இடத்தில் கடந்த 2021 ஆம் ஆண்டு இதே நாளில் பேருந்து விபத்துக்குள்ளாகி 13 பேர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக பிரதேச மக்கள் மத்தியில் ஒரு வித அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது. (நி)

# சுழிபுரம் பத்திரகாளி அம்பாளின் பங்குனிப் பொங்கல் உற்சவம் இன்று

பழந்தமிழர் வரலாற்றிலே தமிழகத்திலும் ஈழத்திலும் முடியுடைய மூவேந்தர் முதற் கொண்ட மன்னர் யாவரும் சக்தி வடிவினளான கொற்றவைத் தெய்வமான காளிக்கு பெருவிழா எடுத்து கொண்டாடி வந்தனர் என்பதை இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. இத்தகு சக்தி வழிபாட்டிற்குரிய தனித்துவமான காலமாக பங்குனி மாதம் விளங்குகின்றது. இதனாலேயே எமது மண்ணில் அமையப்பெற்ற அன்னையின் ஆலயங்கள் பலவற்றிலும் பங்கு மாத உற்சவங்கள் சிறப்பாக இடம்பெறுகின்றன. அந்த வகையில் "தொல்லுலகும் போற்றும் சுழிபுரம்..." என்று பறாளை விநாயகர் பள்ளுவில் சிறப்பிக்கப் பெறும் ஊரின்பால் கோயில் கொண்டருளும் பத்திரகாளித் தாயினுடைய பொங்கல் உற்சவங்களும் நிகழப் பெற்று வருகின்றன.

இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே சோழப் பெருமன்னருடைய ஆட்சிமேலோங்கியிருந்த ஈழப் பிரதேசங்களில் சுழிபுரம் என்கிற இப்பதியும் ஒன்றாகும். இதனால் இப்பிரதேசம் "சோழியபுரம்" என்றும் அழைக்கப் பெற்று வந்திருக்கிறது. கம்மியர் மரபினரான சித்தர் ஒருவர் தனது ஞான நிஷ்டையிலே பத்திரகாளி அம்பாளை ஒளிவடிவமாக கண்டறிந்து பாற்கிழுவை விருட்ஷத்தினடியிலே சிறு கோவிலமைத்து அவித்த கறியுடன் உவித்து ஆக்கிய அமுதால் அம்பாளை பூசித்து வந்திருக்கிறார்.

இத்தகு பாற்கிழுவை விருட்ஷமே அம்பாளுடைய தல விருட்ஷமாக இன்றும் அமைந்திருக்கிறது. அவர் நிவேதித்து வந்த அவியல் முறைமையே இன்றும் அம்பாளுக்குரிய பொங்கல் முறையாக அமைந்திருக்கிறது என்பதுடன் மடையிடப் பெற்ற சோற்று அமுதானது தீராத பிணி தீர்க்கும் அருமருந்து.

இவ்வாலயச் சூழலில் இன்று வரை வாழ்ந்து வரும் கம்மாளச் சித்தருடைய மரபினதே அம்பாளை தமது குல தெய்வமாகக் கருதி ஆராதித்து வரும் நிலையில் தினந்தினம் அம்பாளுடைய அனுக்கிரகம் எல்லோரையும் ஈர்த்து ஆட்கொண்டு வருவதால் சுழிபுரத்து பத்திரகாளித் தாயானவள் தன்னை நாடிவரும் அடியவர்களின் குறை குற்றங்களை நிவர்த்தி செய்து அருளாட்சி புரியும் உலகமாதாவாக விளங்கி வருகின்றாள்.

**துரை-கணேசமூர்த்தி**
**(ஆசிரியர்)**


**யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்க ஆண்டுப் பொதுக்கூட்டம்**

**இடம்:** விசாலாட்சி மண்டபம் (கல்லூரி மண்டபம்)
**காலம்:** 02.04.2023
**நேரம்:** பிற்பகல் 3.00 மணி

புதிய நிர்வாகக் குழு உறுப்பினர் தெரிவும் புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளுதலும் இடம்பெறும். கல்லூரியின் பழைய மாணவிகள் அனைவரும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**யாழ்.இந்து மகளிர் கல்லூரி,**
**பழைய மாணவிகள் சங்கம்.** (சி-6196)



**அறிவித்தல்**
**நல்லூர் பிரதேச சபை**

நல்லூர் பிரதேச சபையின் நல்லூர் உப அலுவலக பிரிவிலும் கொக்குவில் உப அலுவலக பிரிவிலும் இயங்கும் சகல வியாபார, தொழில் நிலையங்கள், விளம்பரப் பலகைகள், தொலைத் தொடர்பு கோபுரங்கள் அனைத்தும் 2023 மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் உரிய வரிகளை செலுத்தி உரிமம் - அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். தவறின் 1987 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் சட்டம் 154/4 ஆம் பிரிவின் கீழ் எவ்வித முன்னறிவித்தலுமின்றி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத் தருகின்றேன்.

குறிப்பு: உரிய அனுமதியற்ற விளம்பரப் பலகைகள் யாவும் 31.03.2023 ஆம் திகதியின் பின் பிரதேச சபையால் அகற்றப்படும்.

**செயலாளர்,**
**நல்லூர் பிரதேச சபை.** (சி-6197)


# டொலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த வாரத்தில் அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் மதிப்பு அதிகரித்துள்ளது. டொலருக்கு நிகரான ரூபாவின் மதிப்பு 7.8% உயர்ந்துள்ளதாக மத்திய வங்கி அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

மேலும், ஜப்பானிய யென், யூரோ மற்றும் ஸ்டெர்லிங் பவுண்ட் ஆகியவற்றுக்கு நிக ரான ரூபாவின் பெறுமதியும் முறையே 8.3%, 7% மற்றும் 8% ஆக அதிகரித்துள்ளது. (நி)


**யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கம்**
**32 வது வருடாந்தப் பொதுக்கூட்டம்**

**தலைவர்:** பேராசியர் சி.சிறிசற்குணராசா (துணைவேந்தர்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
**இடம்:** யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி (பேராசிரியர் அ.துரைராசா மண்டபம்)
**காலம்:** 02.04.2023 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணி

31 வது ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்படுவதோடு புதிய ஆண்டுக்கான செயற்குழுத் தெரிவும் இடம்பெறும். கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்,**
**யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி,**
**வல்வெட்டித்துறை.** (G-6194)

**கு. மனோகரன்,**
**செயலாளர்,**
**T.P - 077 171 0294**



**நல்லூர் பிரதேச சபை**
**பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்**

**இடம்:** தலைமை அலுவலகம் - நலலூர் பிரதேச சபை.
**காலம்:** 29.03.2023 புதன்கிழமை மு.ப 10.00
**ஏலப்பொருட்கள்:** பாவித்த அலுவலகப் பொருட்கள், தளபாடப் பகுதிகள், கூரைத் தகரங்கள், தகர அலுமாரிகள், கூரை மரங்கள், கண்ணாடித் தொகுதிகள், பழைய இரும்பு, ரயர் வகைகள்

1: 19.5L - 24 - 02
2. 13.6 - 28 - 02
3. 12.4 - 28 - 06
4. 6.00 - 16 - 06
5. 7.50 - 16 - 02
6. 4.00 - 8 - 03

ஆர்வமுள்ளோர் ஏலப்பொருட்களை 27.03.2023, 28.03.2023 ஆம் திகதிகளில் மு.ப 9.30- பி.ப 3.00 மணிக்கிடையில் தலைமை அலுவலகத்தில் பார்வையிட்டு 29.03.2023 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு நடைபெறும் ஏலத்தில் கலந்து கொள்வதற்கான விண்ணப்பத்தை மு.ப 8.30 - 9.50 வரை கட்டணம் செலுத்தி உரிய விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பித்து ஏலத்தில் கலந்து கொள்ளலாம் என்பதுடன், ஏலத்தில் சித்தி பெறுவோர் அதற்கான பெறுமதியினை உடன் செலுத்தி அன்றைய தினம் மாலை 3.00 மணிக்கு முன்பாகப் பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறேன்.

**செயலாளர்,**
**நல்லூர் பிரதேச சபை,**
**கொக்குவில். 021 222 2700**


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 100 | 150 | 180 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 150 | 160 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 300 | 300 |
| தக்காளி | 200 | 120 | 150 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| கோவா | 80 | 80 | 100 | 100 |
| கரட் | 100 | 170 | 160 | 200 |
| பூசணி | 80 | 80 | 60 | 60 |
| புடோல் | 180 | 160 | 150 | 150 |
| வாழைக்காய் | 160 | 150 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 150 | 120 | 150 |
| பாகற்காய் | 400 | 700 | 500 | 500 |
| வெண்டக்காய் | 200 | 300 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 200 | 180 | 150 | 240 |
| லீக்ஸ் | 250 | 220 | 250 | 280 |
| பீற்றூட் | 140 | 150 | 280 | 180 |
| கறிமிளகாய் | 350 | 350 | 280 | 300 |
| முருங்கைக்காய் | 1800 | 1900 | 1200 | 2000 |
| போஞ்சி | 250 | 290 | 280 | 300 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 120 | 160 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 70 | 80 |
| தேசிக்காய் | 200 | 100 | 160 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 100 | 80-110 |
| இராசவள்ளி | 300 | 350 | 300 | 350 |
| வெங்காயப்பூ | 150 | 120 | 200 | 300 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 150 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 25 | 30 | 60 |
| ஈரப்பலா | 100 | 120 | 100 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 132





பாட்டனாரின் பராந்தகன் என்னும் பெயரையும் மக்கள் அளித்த சுந்தர சோழன் என்னும் காரணப் பெயரையும் சூட்டிக் கொண்டிருந்தான்.

எனவே தனக்குப் பிறகு தமது சகோதரன் அரிஞ்சயனும் அரிஞ்சயனுக்குப் பிறகு அவனுடைய புதல்வன் சுந்தரசோழனும் பட்டத்துக்கு வர வேண்டும் என்று கண்டராதித்த திருவுளம் கொண்டார். இந்த ஏற்பாட்டுக்கு சாமந்த கனத்தினர், தண்ட நாயக்கர்கள், பொதுஜன பிரதிநிதிகள் எல்லாருடைய சம்மதத்தையும் ஒருமனதாகப் பெற்று பகிரங்கமாக உலகறியத் தெரிவித்தும் விட்டார்.

இந்த ஏற்பாடுகள் எல்லாம் நடந்து முடிந்த பிறகு கண்டராதித்தரின் வாழ்க்கையில் ஓர் அதிசயச் சம்பவம் நிகழ்ந்தது. மழவரையன் என்னும் சிற்றரசன் திருமகளை அவர் சந்திக்கும்படி நேர்ந்தது. அந்த மங்கையர் திலகத்தின் அழகும் அடக்கமும் சீலமும் சிவபக்தியும் அவர் உள்ளத்தைக் கவர்ந்தன. முதிர்ந்த பிராயத்தில் அந்தப் பெண்மணியை மணந்து கொண்டார். இந்தத் திருமணத்தின் விளைவாக உரிய காலத்தில் ஒரு குழந்தையும் உதித்தது.

அதற்கு மதுராந்தகன் என்று பெயரிட்டுப் பாராட்டிச் சீராட்டி வளர்த்தார்கள். ஆனால் அரசர், அரசி இருவருமே இராஜ்யம் சம்பந்தமாக முன்னம் செய்திருந்த ஏற்பாட்டை மாற்ற விரும்பவில்லை. தம்பதிகள் இருவரும் சிவபக்தியிலும் விரக்தி மார்க்கத்திலும் ஈடுபட்டவர்களாதலால் தங்கள் அருமைப் புதல்வனையும் அந்த மார்க்கத்திலேயே வளர்க்க விரும்பினார்கள்.

கேவலம் இந்த உலக சாம்ராஜ்யத்தைக் காட்டிலும் சிவலோக சாம்ராஜ்யம் எவ்வளவோ மேலானது என்று நம்பியவர்களாதலால், அந்தச் சிவலோக சாம்ராஜ்யத்துக்கு உரியவனாக மதுராந்தகனை வளர்க்க ஆசைப்பட்டார்கள். ஆகையால் கண்டராதித்தர் தமக்குப் பிறகு தம் சகோதரன் அரிஞ்சயனும் அவனுடைய சந்ததிகளுமே சோழ சாம்ராஜ்யத்துக்கு உரியவர்கள் என்ற தமது விருப்பத்தைப் பகிரங்கப்படுத்தி நிலைநாட்டினார். எனவே, இராஜாதித்தன், கண்டராதித்தர் என்னும் இரு உரிமையாளர் வம்சத்தைத் தாண்டி அரிஞ்சயன் வம்சத்தாருக்குச் சோழ சிங்காதனம் உரிமையாயிற்று.

கண்டராதித்தருக்குப் பிறகு அதிக காலம் பரகேசரி அரிஞ்சயன் ஜீவியவந்தனாக இருக்கவில்லை. ஒரு வருடத்திலேயே தமையனாரைப் பின் தொடர்ந்து தம்பியும் கைலாச பதவிக்குச் சென்று விட்டான்.

பின்னர், இளவரசர் சுந்தர சோழருக்கு நாட்டாரும் சிற்றரசர்களும் பிற அரசாங்க அதிகாரிகளும் சேர்ந்து முடிசூட்டி மகிழ்ந்தார்கள். இராஜகேசரி சுந்தர சோழரும் அதிர்ஷ்டவசத்தினால் தமக்குக் கிடைத்த மகத்தான பதவியைத் திறம்படச் சிறப்பாக வகித்தார்.

ஆட்சியின் ஆரம்பக் காலத்தில் பல வீரப் போர்கள் புரிந்து பாண்டிய நாட்டையும் தொண்டை மண்டலத்தையும் மீண்டும் வென்றார். இராஷ்டிரக்கூடப் படைகளைத் தென் பெண்ணைக் கரையிலிருந்து விரட்டி அடித்தார். சுந்தர சோழ சக்கரவர்த்தியின் புதல்வர்களான ஆதித்த கரிகாலரும் அருள்மொழிவர்மரும் தந்தையை மிஞ்சக் கூடிய இணையற்ற வீரர்களாயிருந்தார்கள்.

அவர்கள் இருவரும் தந்தைக்குப் பரிபூரண உதவி செய்தார்கள். அவர்கள் மிகச் சிறுபிராயத்திலேயே போருக்குச் சென்று முன்னணியில் நின்று போர் புரிந்தார்கள். அவர்கள் சென்ற போர் முனைகளிலெல்லாம் விஜயலக்ஷ்மி சோழர்களின் பக்கமே நிலை நின்று வந்தாள்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்


## ஒரே அடியில் இருநூறு பேர்

(நேற்றைய தொடர்ச்சி)

அதைக் கட்டி இழுக்க உறுதியான கயிறு ஒன்றைக் கொடு என்று கேட்டான் அவன்.

இதைக் கேட்ட பூதம் மேலும் பயந்தது. நீ நீர் கொண்டு வர வேண்டாம். நானே கொண்டு வருகிறேன் என்றது அது.

இருவரும் சாப்பிட்டு முடித்தனர். அங்கிருந்த கட்டிலில் அவன் படுத்துக் கொண்டான். பக்கத்தில் இருந்த இன்னொரு கட்டிலில் பூதம் படுத்துக் கொண்டது. தன் உயிருக்கு ஆபத்து வரும் என்று நினைத்த அவன் தூங்காமலே இருந்தான். பூதம் தூங்கி விட்டதை அறிந்த அவன் கட்டிலிலிருந்து



மெல்ல இறங்கினான். ஒரு பூசணிக் காயைத் தன் கட்டிலில் வைத்தான். அதன் மீது போர்வையைப் போட்டு மூடினான். பார்ப்பதற்குக் கட்டிலில் யாரோ படுத்திருப்பது போலத் தோன்றியது..

பிறகு கட்டிலுக்கு அடியில் படுத்துக் கொண்டான் அவன்.

நள்ளிரவு நேரம், பூதம் கட்டிலை விட்டு எழுந்தது. பக்கத்தில் இருந்த பெரிய இரும்புத் தடியைத் தூக்கியது.

கட்டிலில் படுத்திருந்த அவன் மண்டையில் தன் வலிமை கொண்ட அந்தத் தடியால் அடித்தது. போர்வைக்குள் இருந்த பூசணிக்காய் உடைந்து சிதறியது.

அவன் இறந்து விட்டான் என்று மகிழ்ந்தது அது. தன் கட்டிலில் படுத்த அது குறட்டை விடத் தொடங்கியது.

கட்டிலுக்கு அடியில் படுத்திருந்த அவன் எழுந்தான். பூசணிக் காய்த் துண்டுகளை எடுத்து வெளியே வீசினான். மீண்டும் அந்தக் கட்டிலில் படுத்துத் தூங்கத் தொடங்கினான்.

பொழுது விடிந்தது. விழித்த பூதம் கட்டிலில் அவன் உயிருடன் படுத்திருப்பதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தது.

கட்டிலில் இருந்து எழுந்து அமர்ந்தான் அவன்.

இரவு நன்றாகத் தூங்கினாயா? உன் தூக்கத்திற்கு ஏதேனும் தொல்லை ஏற்பட்டதா? என்று கேட்டது அது.

நள்ளிரவிலே ஏதோ கொசு ஒன்று என் காதில் கடித்தது போல இருந்தது. புரண்டு படுத்தேன். இங்கே கொசு அதிகமா? என்று கேட்டான் அவன்.

என் வலிமை எல்லாம் பயன்படுத்தி இரும்புத் தடியால் இவன் மண்டையில் ஓங்கி அடித்தேன். யாராக இருந்தாலும் இறந்திருக்க வேண்டும்.

இவனோ கொசு கடித்தது போல இருந்தது என்கிறான். இவனிடம் நன்றாக மாட்டிக் கொண்டோமே. எப்படித் தப்பிப்பது? என்று பயந்து நடுங்கியது அது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடிப்பைக் கொண்டுள்ள ஒருவர் உண்மையைக் கொள்வாரானால் அவருக்குள் துன்பங்கள் நேரிடாது.
*– ஸ்டெர்னி*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இலங்கையின் பொருளாதாரம் போலவே தமிழர்களின் அரசியலும் உள்ளது

நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடக்கிறது.

எதிர்காலத்தில் அதனைத் தூக்கி நிமிர்த்துவது சாத்தியப்படமாட்டாதென்பதே உண்மை.

இவ்வாறு இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணம் என்ன? என்பதை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

ஆக, இந்த நாட்டை யார் மீட்பார்கள் என்று சிங்கள மக்கள் நம்பினார்களோ அவர்களே, இந்த நாட்டை பாதாளத்தில் வீழ்த்திவிட்டனர்.

இதை நாம் கூறும்போது எம் தமிழ் மக்களின் எதிர்காலம் எப்படியாக இருக்கும் என்ற கேள்வி எழவே செய்யும்.

இந்தக் கேள்வியானது பொருளாதார வீழ்ச்சி காரணமாகத் தமிழ் மக்களின் பொருளாதாரச் சூழமைவு எவ்வாறாக இருக்கும் என்பது பற்றியும்

தமிழ் மக்களின் எதிர்கால அரசியல் எப்படியாக அமையும் என்பது பற்றியுமான பதிலை எதிர்பார்ப்பதாக அமையும்

ஆம், நாட்டின் பொருளாதார வீழ்ச்சி என்பது எங்ஙனம் சிங்கள மக்களை வாட்டுகிறதோ அதேபோல தமிழ் மக்களையும் வாட்டவே செய்கிறது.

இருந்தும் புலம்பெயர் தமிழ் மக்களின் உதவிக்கரம் தாயகம் நோக்கியதாக இருக்கும்வரை, பொருளாதார நெருக்கடிக்கு ஈடுகொடுக்க முடியும் என்ற நம்பிக்கை தமிழ் மக்களிடம் உண்டு.

அதாவது தாங்கள் படித்த கல்லூரிகளைத் தரிசிப்பதற்காகப் புலம்பெயர் தமிழ் உறவுகள் தாயகம் வந்தபோது, இலங்கை ரூபாய் தலைநிமிர்ந்து அவர்களைப் பார்த்து;

ஓ! என் உறவுகளே நீங்கள் இப்படி இடைசுகம் வந்து போனால் கூட, படுக்கைப் புண் வராத அளவில் நாம் இடையிடையே நிமிர்ந்து நிற்கவும் சற்று நடக்கவும் கூடியதாக இருக்கும் என்று கூறுவது போல இருந்தது.

ஆனால் தமிழ் மக்களின் அரசியலைப் பொறுத்தவரை அது இந்த நாட்டின் பொருளாதாரத்தைவிட மிக மோசமாக வீழ்ந்து போயிற்று.

இதை இன்னும் ஒருபடி மேற்சென்று கூறுவதாயின், தமிழர் அரசியல் என்பது பாடுகிடையாய் வீழ்ந்து விட்டது எனலாம்.

இருந்தும் நம் அரசியல் வீழ்ந்து விட்டது என்பதைக்கூட நம்மால் புரிந்து கொள்ள முடியாமல் இருப்பதுதான் வேதனையிலும் வேதனை.

என்ன செய்வது நம் இளம் அரசியல்வாதிகள்கூட, தமிழரின் அரசியலை தூக்கி நிறுத்த வேண்டுமென்று நினைக்காமல், பதவி ஆசை கொண்டு நிற்கிறார்கள் எனில், எங்கள் அரசியல் மருத்துவ ரீதியில் மரணித்துவிட்டது என்று கூறுவதைவிட வேறு ஏது வார்த்தை.

# உணவுத் தேவையை பூர்த்திசெய்ய முடியாத நிலையில் 41 இலட்சம் குடும்பங்கள்

## இலங்கை தொடர்பில் உலக உணவுத் திட்டம் அறிக்கை

(கொழும்பு)

தாம் பெறும் வருமானத்தில் உணவுத் தேவையை பூர்த்தி செய்ய முடியாத நிலையில் ஜனவரி மாத இறுதிக்குள் 82 சதவீத இலங்கைக் குடும்பங்கள் வாழ்வாதாரத்திற்கான வேறு வழிகளைக் கடைப்பிடித்துள்ளதாக உலக உணவுத் திட்டத்தின் சமீபத்திய ஆய்வு அறிக்கை தெரிவிக்கிறது.

இலங்கையில் உள்ள 48 வீதமான குடும்பங்கள் நிதி நிறுவனம் அல்லது கடனாளிகளிடமிருந்து கடன் பெற்றுள்ளனர் அல்லது தமது குடும்பத்திற்கு உணவைப் பெறுவதற்காக தங்க ஆபரணங்களை அடகு வைத்து பணத்தைப் பெற்றுள்ளனர் என்று அந்த அறிக்கை கூறுகிறது.

இலங்கையில் 43 வீதமான குடும்பங்கள் கல்வி மற்றும் சுகாதாரத்திற்காக செலவிடும் பணத்தை குறைத்து அந்த பணத்தை உணவுக்காக பயன்படுத்தியதாகவும் மேலும் 35 வீதமான குடும்பங்கள் சேமித்த பணத்தை அல்லது கடனை செலுத்த தவறியதன் மூலம் அப் பணத்தை கொண்டு உணவுத் தேவையை பூர்த்தி செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டிசம்பர் மாதத்துடன் ஒப்பிடும் போது இலங்கையில் எரிபொருள் விலை குறித்த கவலை ஜனவரியில் 11 வீதத்திலிருந்து 6 வீதமாக குறைந்துள்ளதாகவும் உணவுப் பொருட்களின் விலை குறித்த கவலை 87 வீதத்தினால் அதிகரித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனவரி மாத இறுதியில் ஊவா மாகாணத்தில் அதிக உணவுப் பற்றாக்குறை காணப்படுவதாகவும், ஊவா மாகாணத்தில் கடந்த டிசம்பரில் 43 சதவீதமாக இருந்த உணவுப் பற்றாக்குறை ஜனவரி மாத இறுதிக்குள் 47 சதவீதமாக அதிகரித்துள்ளதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

மேல்மாகாணத்தில் டிசம்பர் மாதத்துடன் ஒப்பிடும் போது ஜனவரி மாதத்தில் உணவுப் பாதுகாப்பின்மை 10 வீதத்தால் குறைந்துள்ளது இதன் காரணமாக ஜனவரி மாத இறுதிக்குள் 23 சதவீதம் உணவுப் பாதுகாப்பற்ற மாகாணமாக மேல் மாகாணம் மாறியுள்ளது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7,9)

# உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் சுற்றுச்சூழல் பாதுகாப்பு செயற்திட்டத்தினூடாக "உலக தண்ணீர்" தினத்தை முன்னிட்டு நவாலி புனித பேதுருவானவர் ஆலய வளாக முன்றலில் நாளை (புதன்கிழமை) காலை 8 மணிக்கு விழிப்புணர்வு நிகழ்வு முன்னெடுக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில் அரச உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-7)

# அச்சுவேலியில் பதின்ம வயது சிறுமி கூட்டு வன்புணர்வு

## இருவர் கைதாகி மறியலில்

அச்சுவேலியில் பதின்ம வயது சிறுமி ஒருவர் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட சிறுமி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சட்ட மருத்துவ வல்லுனர் முன்னிலையில் இடம்பெற்ற பரிசோதனையில் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டமை மற்றும் சிறுமி போதையில் இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

அச்சுவேலி தென்மூலை பகுதியில் 15 வயது சிறுமி ஒருவர் மதுசாரயம் பருக்கப்பட்டு கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார் என்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சிறுமி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ வல்லுநரிடம் முற்படுத்தப்பட்டார்.

அவரது சிறுநீர் பரிசோதனையில் மதுபான செறிவு இருந்தமை உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், அவர் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார் என்றும் அறிக்கையிடப்பட்டது.

சம்பவம் தொடர்பில் 22 மற்றும் 31 வயதுடைய இருவர் அச்சுவேலி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் இருவரும் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (ம-7,9,33)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை வவுனியா பிரதேசத்தின் சிதம்பரபுர பிரதேசத்திலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடுநீர் பட்டதில் யுவதி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பங்குனித் திங்கள் தினமான நேற்று ஆலயத்தில் தொண்டாற்றிக்கொண்டிருந்த யுவதி ஒருவர் முதுகில் சுடுநீர் ஊற்றுப் பட்டதில் படுகாயமடைந்துள்ளார்.

தென்மராட்சி-மட்டுவில் பகுதியில் உள்ள ஆலயமொன்றில் மோதகம் அவிப்பதற்கு வைத்திருந்த சுடுநீர் அடுப்பு உடைந்து யுவதியின் முதுகில் தவறுதலாக பட்டதில் குறித்த யுவதி படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த யுவதி உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். (ம-7,9,30)

# டெலிகொம், லங்கா வைத்தியசாலை அரச பங்குகள் விற்பனை

## அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

ஸ்ரீலங்காடெலிகொம் பிஎல்சி மற்றும் லங்கா வைத்தியசாலை பிஎல்சி ஆகியவற்றில் அரசாங்கத்தின் பங்குகளை விற்பனை செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இது தொடர்பில் கொழும்பு பங்குச்சந்தைக்கு அறிவித்துள்ள ஸ்ரீலங்காடெலிகொம் பிஎல்சி, நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அரச நிறுவன சீர்திருத்தப் பிரிவினால் அறிமுகப்படுத்தப்பட்ட பங்குகளின் விற்பனை எதிர்காலத்தில் இடம்பெறும் என தெரிவித்துள்ளது.

இதேவேளை, லங்கா வைத்தியசாலை பிஎல்சியும் இது தொடர்பான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

ஸ்ரீலங்காடெலிகொம் பிஎல்சியின் வெளியிடப்பட்ட பங்கு மூலதனத்தில் 49.50% திறைசேரியிடம் உள்ளது.

லங்கா வைத்தியசாலை பிஎல்சியின் பங்கு மூலதனத்தின் 51.34% அரசாங்கத்தின் சார்பாக இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனத்திடம் உள்ளது. (ம-7,9)

# வடக்கு கடல் பகுதியை இந்திய மீனவர்களுக்கு குத்தகைக்கு வழங்குவதை கண்டித்து போராட்டம்

(மன்னார்)

**வடக்கு கடல் பகுதியில் வரி அறவீடு செய்து இந்திய மீனவர்களுக்கு வாரத்தில் மூன்று நாட்களுக்கு குத்தகைக்கு வாங்குவது தொடர்பாகவும் இந்திய மீனவர்கள் தொடர்ச்சியாக இலங்கை கடல் பகுதியில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபடுவதை கண்டித்து வடக்கு மாகாண மீனவர்கள் ஒன்றிணைந்து நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்க உள்ளனர்.**

மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்க சமாச செயலாளர் என்.எம். ஆலம், மன்னார் மாவட்ட கிராமிய சம்மேளனத் தலைவர் ஜஸ்ரின் சொய்சா, மீனவ சமூகம் சார்பாக அன்ரனி சங்கர் ஆகியோர் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில கலந்து கொண்டு தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டமானது மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்டு மன்னார் மருத்துவமனையின் பிரதான பர்தையூடாக சென்று புதிய பேருந்து நிலையத்தில் இறுதி நிகழ்வுகள் நடைபெற உள்ளன.

இதற்கு அமைவாக வட பகுதியில் இருக்கும் பொது அமைப்புக்கள் , மீனவ சங்கங்கள் , ஏனைய சிவில் சமூகங்கள் அனைத்தும் எம்மோடு இணைந்து. இந்த விடயத்திற்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம் மேலும் அன்றைய தினம் அனைவரும் முழுமையாக கடல் தொழிலை நிறுத்தி வர்த்தக நிலையங்களை மூடி ஒத்துழைப்பு தருமாறு நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். இதற்கான உத்தியோக பூர்வ கடிதங்களை அந்தந்த அமைப்புகளுக்கும் சங்கங்களுக்கும் நாங்கள் விரைவில் அனுப்ப இருக்கிறோம் என தெரிவித்தனர். (நி)

## அரச காணிகள் தொடர்பான இலவச சட்ட ஆலோசனை நிகழ்வு



அரச காணிகள் தொடர்பான இலவச சட்ட ஆலோசனை வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பயிற்சி மையத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதான வளவாளர்களாக அரசாங்க சட்ட வரைஞர் திணைக்களத்தின் சட்ட வரைஞர் சட்டத்தரணி செல்வ குணபாலன் தலைமையிலான சட்டத்தரணிகள் குழாம் கலந்து கொண்டு அரச காணிகளில் இருக்கக்கூடிய பிரச்சினைகள் தொடர்பிலான இலவச சட்ட ஆலோசனைகளை பொதுமக்களுக்கு வழங்கினர்.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், கரைச்சி பிரதேச சபை உதவி பிரதேச செயலாளர், சட்டத்தரணிகள், சட்டக் கல்லூரி மாணவர்களுடன் 50 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். (நி-6-33)

## இரணைமடு குளத்தில் 500 ஏக்கர் நெற்செய்கைக்கு விவசாயிகளுக்கு அனுமதி

(கருமபுரம்)

கல்மடு விவசாயிகளிற்கு இரணைமடு குளத்தின் கீழ் 500 ஏக்கர் நெற்செய்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இரணைமடு குளத்தின் கீழ் சிறுபோக செய்கை தொடர்பான கலந்துரையாடல் இரணைமடு விவசாய சம்மேளன மண்டபத்தில் நேற்று இடம்பெற்றதை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இரணைமடு குளத்தில் 82 ஆயிரம் ஏக்கர். அடி நீர் தேக்கப்பட்டுள்ள நிலையில் 13,500 ஏக்கர் நிலபரப்பில் சிறுபோக செய்கை மேற்கொள்ள உள்ளோம்.

அந்த வகையில், 60 ஏக்கர் மறு பயிர்ச்செய்கைக்கும், 500 ஏக்கர் கல்மடு விவசாயிளிற்கும் வழங்கவுள்ளோம். ஏனெனில், கல்மடு குளம் அபிவிருத்திக்காக திறந்துவிடப்பட்டுள்ளமையால் ,அங்கு சிறுபோகம் செய்ய முடியாதுள்ளது. எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகளிற்கு இவ்வாறு வழங்க உள்ளதாகவும் தெரிவித்தார். (நி-6-315-316)

## மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்து

### இருவர் படுகாயம்

(கருமபுரம்)

அக்கராயன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வன்னேரி குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயம் அடைந்துள்ளனர். நேற்று முன்தினம் இரவு கிளிநொச்சியில் இருந்து வன்னேரிகுளம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் வன்னேரிக்குளம் பகுதியில் இருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் இருவர் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து ஒருவர் மேல திக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அதில் ஒருவர் கிளிநொச்சி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார் இச் சம்பவம் தொடர்பாக அக்கராயன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-6-316)

## சடலத்தை அடையாளம் காண உதவுமாறு பொலிஸார் கோரிக்கை

(குருமன்காடு)

வவுனியா குளத்தில் மீட்கப்பட்ட இளைஞனின் சடலத்தை அடையாளம் காண உதவுமாறு வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை சடலமாக மீட்கப்பட்டிருந்த குறித்த இளைஞனின் மரணம் தொடர்பில் வவுனியா பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். அத்துடன் குறித்த இளைஞனின் சடலம் அடையாளம் காணப்படவில்லை.

25 தொடக்கம் 30 வயதுக்கு உட்பட்டவராக குறித்த இளைஞன் காணப்படுவதுடன் இடது கையில் அம்மா என பச்சை குத்தியுள்ளார்.

கழுத்தில் சிவப்பு நூலும் ஒரு கையில் ஆலய நூலும் மற்ற கையில் நீல பட்டியும் அணிந்துள்ளார். எனவே, இவ் இளைஞன் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு அல்லது வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்குமாறு பொலிஸார் கோரியுள்ளனர். (நி-6-250)




முல்லைத்தீவு சிலாவத்தை தீர்த்த கரை கிராமம் இலங்கை வங்கியின் மூன்றாவது கிராமமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

(படம்- யதுபாஸ்கரன்)

## பண்ணாகம் முருகமூர்த்தி கோவில் மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

பண்ணாகம் விசலத்தலை ஸ்ரீ முருகமூர்த்தி கோவில் மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பதினொரு தினங்கள் இடம்பெறும் உற்சவத்தில் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் 5 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது என கோவில் பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சியில்...

சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வடமராட்சிப் பகுதியில் நேற்று திங்கட்கிழமை காலை மழை பெய்ததோடு நண்பகல் அளவில் இடிமின்னல் தாக்கமும் ஏற்பட்டது.

இந்நிலையில் வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆண்டார் வளவு, கொற்றாவத்தை பகுதியிலுள்ள வீடு ஒன்றில் இடி மின்னல் தாக்கம் ஏற்பட்டது. இதனால் வீட்டு மின்சுற்று முற்றாக எரிந்து நாசமானது.

இதன்போது வீட்டில் இருந்த 2 வயதுடைய உஜீவன் அர்வின் என்ற சிறுவன் தலைப்பகுதியில் காயமடைந்த நிலையில் பருத்துத்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7,9,60)

## அரசடியில்...

கும் அரசடியைச் சேர்ந்த குழுவுக்கும் கடந்த இரண்டு நாட்களாக நிலவிய தகராற்றின் தொடர்ச்சியாக இந்த வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

முச்சக்கரவண்டியில் சென்ற இளைஞர்கள் எரிபொருள் தீர்ந்த நிலையில் வீதியோரம் நின்ற சமயத்தில் இந்த வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,9)

## கஞ்சா கடத்த...

பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எழுதுமட்டுவாழ் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து அரச புலனாய்வுப் பிரிவினர் 16 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவினை மீட்டதுடன் அங்கு காணப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றினையும் மீட்டிருந்தனர்.

இந் நிலையில் மோட்டார் சைக்கிள் இலக்கத்தை வைத்து மேற்கொண்ட மேலதிக விசாரணைகளின் அடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் அவருடைய சகோதரரும் கைதாகியுள்ளனர்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய வீட்டு உரிமையாளர் ஏற்கெனவே பொலிஸ் நிலையத்தில் சரணடைந்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9,30)

## ஐ.பி.எல்லில்...

நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தை தெரியப்படுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பங்களாதேஷில் விளையாடியது எனக்கு நிறைய அனுபவங்களையும், சர்வதேச விளையாட்டு வீரர்களின் அறிமுகங்களையும் பெற்றுத் தந்தது.

தற்போது ஐ.பி.எல்லில் ராஜஸ்தான் அணியின் வலைப் பந்துவீச்சு வீராக எனக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. என்னுடன் குமார் சங்கக்கார கதைத்து இருந்தார்.

எனது கிரிக்கெட்டை அடுத்து கட்டத்திற்கு எடுத்துச் செல்ல கவனிக்கிறேன் என்றார். அது தொடர்பில் சிலருடன் கதைத்து எனக்கான வாய்ப்புக்களை பெற்றுத் தந்துள்ளார். அவருக்கு எனது நன்றிகளைத் தெரிவித்து கொள்கிறேன்.

எனக்குக் கிடைத்துள்ள வாய்ப்புகளை நான் முடிந்தளவு பயன்படுத்தி என்னை வளர்த்துக் கொள்வேன் என்றார். (ம-7,9,33)

## ஆட்டோ...

முச்சக்கரவண்டி சாரதிகள் மற்றும் உரிமையாளர்கள் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, முதல் ஒரு கிலோ மீற்றருக்காக அறவிடப்படும் கட்டணம் 120 ரூபாயில் இருந்து 100 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஏனைய கிலோ மீற்றர்களுக்கான கட்டணங்கள் 100 ரூபாயில் இருந்து 80 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

## தேர்தலை...

சந்திப்பில் உரையாற்றும்போதே இவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நாட்டு மக்களின் முழுமையான ஆதரவு "திசைகாட்டி" சின்னத்துக்குக் கிடைத்துள்ளது. ஆளும் தரப்பினருக்கு அரசின் பலம் காணப்பட்டாலும் தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் பலமே போதுமானது.

இந்த மக்கள் பலத்துக்கு - மக்கள் சக்திக்கு அஞ்சியே உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த அரசு பின்னடிக்கின்றது. தேர்தலை அரசு தொடர்ந்தும் ஒத்திவைக்க முடியாது. 340 உள்ளூராட்சி சபைகளின் அதிகார காலம் நிறைவுக்கு வந்துள்ளது.

எனவே, தேர்தலை அரசு உடனடியாக நடத்த வேண்டும். இல்லையேல் தேர்தலை வலியுறுத்தும் மக்களின் மாபெரும் போராட்டம் நாட்டின் நாலாபுறமெங்கும் வெடிக்கும். இதை அரசாலும் அதன் படைகளாலும் தடுக்க முடியாது" எனத் தெரிவித்துள்ளார். (ம-7,9)

## இலங்கைக்கு...

காரணமாக நாங்கள் சிறந்த நாட்களை நோக்கி சென்றுகொண்டிருக்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த முக்கியமான நோக்கத்தை அடைவதற்கு பாடுபட்ட ஜனாதிபதிக்கும் இலங்கைக்கு கடன் வழங்கிய அனைவருக்கும் நன்றி என வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கைக்கு கடன் வழங்கும் யோசனைக்கு சர்வதேச நாணய நிதியம் அனுமதி வழங்கியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக்குழு இந்த அனுமதியை வழங்கியுள்ளது.

இதன் படி இலங்கைக்கு சுமார் 2.9 பில்லியன் டொலர் கடன் உதவி வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட அறிவிப்பொன்றை வெளியிடவுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் 7 பில்லியன் டொலர்கள் வரையிலான நிதியுதவியை இலங்கைக்கு அணுக உதவும் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் (EFF) கீழ் இலங்கையின வேலைத் திட்டத்திற்கு IMF நிர்வாக சபை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய சர்வதேச பங்காளிகளின் ஆதரவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது நன்றியைத் தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7,9)

## உள்ளூராட்சி...

நிறுவனங்களின் உத்தியோகபூர்வ காலம் நேற்று முன்தினம் நள்ளிரவுடன் நிறைவடைந்தது.

இதில் 29 மாநகர சபைகள் 36 நகர சபைகள் மற்றும் 275 பிரதேச சபைகள் அடங்கும்.

நாடளாவிய ரீதியில் 341 உள்ளூராட்சி மன்றங்கள் நிறுவப்பட்ட போதிலும், காலி மாவட்டத்தின் எல்பிட்டிய உள்ளூராட்சி மன்றம் ஸ்தாபிக்கப்படுவது தாமதமானதால் அந்த உள்ளூராட்சி மன்றத்தின் பதவிக் காலம் முடிவடையவில்லை.

பதவிக்காலம் முடிவடைந்தவுடன் உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாக விவகாரங்கள் ஆணையாளர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற செயலாளர்களின் கீழ் கொண்டு வரப்படும் என இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கம்புர மேலும் தெரிவித்தார். (ம-7)

## உடுவிலில் மதம்...

டம் ஒன்றினை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம-7,9)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 20/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1520
வெற்றி இலக்கங்கள்
துலாம் 3 5 4 7 3 2
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.03.20
சீட்டிழுப்பு இலக்கம் - 1095
Q 23 63 81 82
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.03.20
சீட்டிழுப்பு இலக்கம் 3307
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
I 13 25 48 74
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 20/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1413
ஆங்கில எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
F 17 08 55 62 67

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.03.20
சீட்டிழுப்பு இலக்கம் 374
தனுசு 25 42 51 59 தனுசு
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/03/20
சீட்டிழுப்பு இலக்கம் 5065
U 6 1 5 8 6 5
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2040
சீட்டிழுப்பு திகதி 2023.03.20
தினம் திங்கட்கிழமை
R 04 60 65 71
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,425,280/-
DLB

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.03.20
சீட்டிழுப்பு இல : 4201
வர்ணம் : இள நீலம்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,239,940/-
வெற்றி இலக்கங்கள் 11 30 49 70
ஆங்கில எழுத்து C
DLB

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது ரூ. 4,456,010/-
திகதி 2023-03-20
வெற்றி வாரம் 3752
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 21 28 37 53 கன்னி
6302
440
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 14,548,590/-
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 35 02 19 37 71
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1216
வர்ணம் பச்சை
திகதி 2023.03.20 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 314,991,908.20
DLB தொலைபேசி: 011-2 333 546-47 Web : www.dlb.lk

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1906
சீட்டிழுப்பு திகதி 2023-03-20
வெற்றி இலக்கங்கள் 13 31 39 61 ஆங்கில எழுத்து P
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 41,114,304.80
DLB தொ. பே. : 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல : 1866
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2023.03.20
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,462,220/-
வெற்றி இலக்கங்கள் 12 27 69 72 ஆங்கில எழுத்து V
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 05.02.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று
சிவபதமடைந்த எங்கள் அன்புச் செல்வம்

அமரர்

## ஜோசேப் அனோஜன்

(அனோச்)

( கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவன், **DHL Warehouse Supervisor** )



தோற்றம் 23.07.2003

மறைவு 05.02.2023

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21.03.2023) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை மறுதினம் (23.03.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தொலைபேசி, சமூக வலைத்தளங்கள், பனர் பதாதைகள் மூலம் அனுதாபச் செய்திகளை தெரிவித்தவர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குறிப்பு : இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**இல. 582/56, சென்.செபஸ்ரியார் லேன்,**
**ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.**

(14955)

**தகவல் :**
**மாமன்மார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.